Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

IV.ANSWER ALL QUESTIONS

1. **(i) தயாரிப்பு மேலாளர் :**
பல்லூடக உருவாக்குதலில், குறித்த நேரத்தில் முழு தரத்துடன் பல்லூடக திட்ட உருவாக்கத்தை வரையறுப்பது மற்றும் ஒருங்கிணைப்பது தயாரிப்பு மேலாளரின் பங்கு ஆகும். தயாரிப்பு மேலாளர் என்பவர் தொழில்நுட்ப திறன்கள், நன்கு திட்டம் வரைதல், கலந்துரையாடல் திறன்கள் மற்றும் வரவு - செலவு மேலாண்மை திறன்கள் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
(ii) பொருளடக்க வல்லுநர் :
பொருளடக்க வல்லுநர் என்பவர் ஏற்கனவே திட்டமிடப்பட்ட பயன்பாட்டின் பொருளடக்கத்தைப் பற்றிய அனைத்து ஆராய்ச்சி செயல்பாடுகளையும் செய்வதற்கு பொறுப்பானவர் ஆவார்.
(iii) ஸ்கிரிப்ட் எழுத்தாளர் :
ஸ்கிரிப்ட் எழுத்தாளர் கருத்துருக்களை முப்பரிமாண சூழல்களில் காட்சிப்படுத்துகிறார். தேவை ஏற்படின், நிரல் மீது மெய்நிகர் உண்மை ஒருங்கிணைப்பைப் பயன்படுத்தலாம்.
(iv) உரை பதிப்பாளர் (Text Editor):
பல்லூடக உருவாக்குதலின் பொருளடக்கம் எப்பொழுதும் தருக்கரீதியான ஓட்டமாக இருத்தல் வேண்டும். உரை எப்பொழுதும் கட்டமைப்பாகவும் சரியான இலக்கணத்தோடும் இருக்க வேண்டும். உரை மற்றும் விவரித்தல் பயன்பாட்டின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.
(v) பல்லூடக வடிவமைப்பாளர் :
பல்லூடக வடிவமைப்பாளர் பல்லூடகத்தின் அனைத்து அடிப்படைத் தொகுதிகளான வரைகலை, உரை, ஒலி, இசை, ஒளிக்காட்சி, புகைப்படம் மற்றும் படைப்பாக்க மென்பொருளைப் பயன்படுத்தி அசைவூட்டல் போன்றவற்றை ஒருங்கிணைப்பார்.
(vi) கணினி வரைகலைக் கலைஞர் :
நிரலின் வரைகலை கூறுகளான பின்னணி, புல்லட்கள், பொத்தான்கள், பாடப்பதிப்பாய்வு, 3-D பொருள்கள், அசைவூட்டல் மற்றும் சின்னங்கள் ஆகியவற்றைக் கையாளும் பங்கினை கணினி வரைகலை கலைஞர் வகிக்கிறார்.
(vii) ஒலி மற்றும் ஒளிக்காட்சி வல்லுநர்:
எடுத்துரைத்தல் மற்றும் சேமிக்கப்பட்ட ஒளிக்காட்சிகளைப் பல்லூடக நிகழ்த்துதலில் கையாளத் தேவைப்படுபவரே ஒலி மற்றும் ஒளிக்காட்சி வல்லுநர் ஆவார். பதிவு செய்தல், ஒலி விளைவுகளை பதிப்பாய்வு செய்தல் மற்றும் இலக்கமாக்கல் ஆகியவற்றுக்கு இவரே பொறுப்பானவர் ஆவர்.

2. பல்லூடக தரவுகளை உருவாக்கி, அதனை வழங்குவதற்கு பயன்படுத்தப்படும் நடப்பு கோப்பு வடிவங்களின் விளக்கம் பின்வருமாறு:
உரை வடிவங்கள் :
(i) RTF முதன்மை கோப்பு வடிவம் RTF (Rich Text Format) மைக்ரோசாப்ட் நிறுவனத்தால் 1987ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட தயாரிப்புகளின் குறிப்புகள் மற்றும் குறுக்கு பணித்தள ஆவணங்களின் பரிமாற்றங்களோடு அறிமுகப்படுத்தப்பட்டது.
(ii) Plain Text கோப்புகளை பல உரை பதிப்பான்களில் திறக்கலாம். படிக்கலாம் மற்றும் பதிப்பாய்வு செய்யலாம். Notepad (Windows), Gedit (அல்லது) nano (UNIX, Linux) TextEdit (Mac Os) போன்றவை பொதுவாக பயன்படுகிறது.
நிழற்பட வடிவங்கள் :
(i) TIFF (Tagged Image File format): கணிப்பொறி பதிப்பக உலகில் (அதிக தரமான வெளியீடு பொதுவானது ஆகும். இது பெரும்பாலும் அனைத்து மென்பொருள் தொகுப்புகளை ஆதரிக்கிறது.
(ii) BMP (Bitmap) : தொடக்கத்தில் இந்த வடிவமானது விண்டோஸ் 3.1-ல் பயன்படுத்தப்பட்டது. இது மிகவும் பெரியது மற்றும் குறுக்கமற்றது.
(iii) DIB (Device Independent Bitmap) : BMP-யை ஒத்ததாகும். இது கோப்புகளை பல்வேறு சாதனங்களில் காண்பிக்க அனுமதிக்கிறது.
(iv) GIF (Graphics Interchange Format): GIF என்பது குறுக்கப்பட்ட நிழற்பட வடிவமாகும். பெரும்பாலான கணினி வண்ண நிழற்படங்கள் மற்றும் பின்னணிகள் GIF கோப்புகளாகும். குறைந்த அளவு வண்ணங்களைப் பயன்படுத்தும் வரைகலைக்கு இந்த கோப்பு வடிவம் மிகச்சிறந்த பொருத்தமாகும்.
(v) JPEG (Joint Photographic Experts Group): JPEG ஒரு பொதுவாக பயன்படுத்தப்படும் முறை ஆகும். இது இழப்புடைய குறுக்க நுட்பத்தைப் பயன்படுத்துகிறது. நிழற்படத்தை மீண்டும் கட்டமைக்கத் தேவைப்படும் தரவுகளில் சிலவற்றை இழப்பதே, இழப்புடைய குறுக்கமாகும்.
(vi) TGA (Targa) : இது அதிக தெளிவுத்திறன் நிழற்படங்களுக்கான முதல் பிரபலமான வடிவமாகும். TGA-கோப்புகள் பொதுவாக அசைவூட்டல் ஒளி தொழில்துறையில் பயன்படுகிறது.
(vii) PNG (Portable Network Graphics) : குறைந்த இழப்பு, சிறியது மற்றும் நன்கு குறுக்கப்பட்டு ராஸ்டர் நிழற்படங்களாக சேமிக்கப்படும் ஒரு நீட்டிப்பு கோப்பு வடிவமாகும். இது GIF-க்கு மாற்றாக செயல்படுகிறது.
இலக்க ஒலி கோப்பு வடிவங்கள்:
(i) WAV (Waveform Audio File Format): விண்டோஸில் குறுக்கப்படாத ஒலி கோப்புகளைச் சேமிக்கும் மிகவும் பிரபலமான ஒலி கோப்பு வடிவமாகும். குறைக்கப்பட்ட கோப்பின் அளவைப் பெறுவதற்காக MP3 போன்ற மற்ற கோப்பு வடிவங்களுக்கு மாற்றி அமைக்க முடியும்.
(ii) MP3 (MPEG layer 3 Format) சேமிக்கவும் பதிவிறக்கம் செய்யவும் மிகவும் பிரபலமான வடிவம் MPEG Layer-3 வடிவமாகும்.
(iii) OGG : சிறந்த ஓட்டத்தினை அடைவதற்காக வடிவமைக்கப்பட்ட இலவச திறந்த மூல கொள்கலன் (Container) வடிவமாகும்

III.ANSWER ALL QUESTIONS

3. 1. TIFF (Tagged Image File Format)
2. BMP (Bitmap)
3. DIB (Device Independent Bitmap)
4. GIF (Graphics Interchange Format)
5. JPEG (Joint Photographic Experts Group)
6. TGA (Targa)
7. PNG (Portable Network Graphics).

4. 1. Wav (Waveform Audio File format)
   2. MP3 (MPEG Layer-3 format)
   3. OGG
   4. AIFF (Audio Interchange File Format)
   5. WMA (Windows Media Audio)
   6. RA (Real Audio Format).
5. 1. AVI (Audio Video Interleave)
   2. MPEG (Moving Pictures Experts Group)
6. 1. இணையம் மற்றும் பல்லூடகத்தின் ஒருங்கிணைப்போடு முக்கிய பயன்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன.
   2. எடுத்துக்காட்டாக, வரைபடம் மற்றும் ஊடகங்கள் நிறைந்த வலைப்பதிவு.
   3. அமெரிக்காவில் இணையம் மற்றும் பல்லூடகத்தின் பயன்கள் பற்றிய விரிவான ஆய்வு நடத்தப்பட்டது.
   4. அதில் 55 மில்லியன் நுகர்வோர்கள் ஒவ்வொரு மாதமும் இணையத்தைப் பயன்படுத்தி வானொலி மற்றும் ஒளிக்காட்சி சேவைகளைப் பெறுகிறார்கள்.
   5. இணையத்தில் மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படும் பல்லூடக வளம் நிழற்படம் ஆகும்.
   6. முகநூல் போன்ற சமூக வலைத்தளங்கள், பல்லூடகம் நிறைந்த பொருளடக்கத்தை நிகழ்நிலையில் பரிமாற வழிவகை செய்கிறது.

II.ANSWER ANY FOUR QUESTIONS

7. பல்லூடகம் என்பது உரை, நிழற்படம், அசைவுப் படம், ஒலி, ஒளிக்காட்சிகள் ஆகிய ஐந்து முக்கியக் கூறுகளைக் கொண்டுள்ளது.
8. (i) நிலையான உரை (Static text)
   (ii) மீ உரை (Hypertext)
9. 1. பிட் மேப் (அ) செவ்வக படம்.
   2. வெக்டர் படங்கள்
10. பல்லூடகம் (Multimedia) என்னும் சொல் 'பல' (Multi) மற்றும் 'ஊடகம்' (Media) என இரண்டு சொற்களை உள்ளடக்கியது.
    பல்லூடகம் என்பது உரை, நிழற்படம், அசைவுப் படம், ஒலி, ஒளிக்காட்சிகள் ஆகிய கூறுகள் அடங்கிய கணிப்பொறி தழுவிய ஒரு வழங்கு முறையாகும்.
11. அசையா படங்களை மிக விரைவாக காண்பிப்பதன் மூலம் அவற்றைத் தொடர்ச்சியான அசைவு போன்ற உணர்வை கொடுக்கும் செயலே அசைவூட்டல் ஆகும்.

I.CHOOSE THE CORRECT ANSWER

12. (d) தகவல் வழங்குவதற்கு பல வகையான ஊடகங்களைப் பயன்படுத்துதல்
13. (a) பல்லூடகம்
14. (a) பிக்செல்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட படம்
15. (b) வடிவியல் வடிவங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட படம்
16. (a) JPEG
17. (c) EPS
18. (b) Microsoft
19. (a) Joint Photographic Experts Group
20. (c) Apple Inc.
21. (a) MP3

QB 365 Study Material
QUESTION BANK 365